செய்தி வெளியீடு எண்.169 நாள். 29.03.2018

**திருவள்ளூர் மாவட்டத்திற்கு 31.03.2018 சனிக்கிழமை அன்று மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள் வருகை தர உள்ளார்.**

**மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 31.03.2018 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணி முதல் 6.15 வரை மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் கோரிக்கை மனுக்கள் அளிக்க விருப்பமுள்ளவர்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளார் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

-----------------

மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு 31.03.2018 அன்று வருகை தர உள்ளார். ஆளுநர் அவர்களின் வருகையையொட்டி பொதுமக்கள் கோரிக்கை மனுக்கள் கொடுக்க விரும்பினால் 30.03.2018 வெள்ளிக்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மக்கள் குறை தீர்க்கும் கூட்ட அரங்கில் தனியாக சிறப்பு கவுண்டர்கள் அமைக்கப்பட்டு மனுக்கள் வாங்கப்படும். அம்மனுக்கள் முறையாக பதிவு செய்யப்பட்டு ஒப்புகை சான்று வழங்கப்பட்டு இம்மனுக்களை மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் நேரிடையாக கொடுக்கப்பட்டு மனுக்களாகவும் பரிசீலிக்கப்படும்.

31.03.2018 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணி முதல் 6.15 மணி வரை திருவள்ளூர் மாவட்ட சுற்றுலா மாளிகையில் (Circuit House) மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் கோரிக்கை மனுக்கள் அளிக்க விருப்பமுள்ளவர்களை நேரிடையாக சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளார். இத்தகவல் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு - செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்**